சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண். ஓ.எஸ். 119/2017

**PW 1 நாகராஜ்** 17.03.2026

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. இறந்துபோன திருமூர்த்திக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என கேட்டால் இரண்டு வீடுகள் உள்ளன. அது எங்கு உள்ளது என கேட்டால் மரப்பேட்டை வீதியில் உள்ளது. வழக்கில் உள்ள சொத்துக்கும் நான் இருப்பதற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என கேட்டால் சுமார் 10 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும். எனது தகப்பனார் திருமூர்த்திக்கு பாத்தியப்பட்ட இன்னொரு சொத்தான வீடு யாருக்கு பாத்தியம் என கேட்டால் தகப்பனார் இறந்ததற்கு பின்னிட்டு எனக்குதான் பாத்தியம். குப்புசாமி, சாந்தி எனக்கு எழுதி கொடுத்துவிட்டார்களா என கேட்டால் எனது தாயார் உயிருடன் இருந்தபோது இரண்டு வீடுகளில் ஒவ்வொன்றையும் அதாவது ஒரு வீட்டை எனக்கும் மற்றொரு வீட்டை குப்புசாமிக்கு வாய்மொழியாக கொடுத்துவிட்டார். அது எப்போது செய்யப்பட்டது என கேட்டால் சுமார் 10 வருடங்கள் இருக்கும். அந்த வீட்டின் பத்திரம் என்னிடம் உள்ளதா என கேட்டால் என்னிடம் இல்லை. அந்த வீட்டிற்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது. ஒரு சொத்தை பொறுத்து வில்லங்க சான்று பெற்று அந்த சொத்திற்கு வில்லங்கம் பார்ப்பது பொறுத்து எனக்கு தெரியும் என கேட்டால் தெரியும். தாவா சொத்தில் கடை மற்றும் வீடு உள்ளது என சொன்னால் அது சரிதான், அங்கு யாரும் குடியில்லை. கடை மற்றும் வீட்டிற்கு வீட்டு வரி இரசீது உள்ளது என்று சொன்னால் வளர்மதி பெயரில் உள்ளது, எங்களுக்கு தெரியாமல் வீட்டு வரிகளை கட்டிவிட்டார்கள். தாவா சொத்திற்கான

பட்டா எனது பெயரில் உள்ளதா என கேட்டால் இல்லை, எனது தகப்பனார் பெயரில் உள்ளது. எனது தகப்பனார் இறந்ததற்கு பின்பு தாவா சொத்து குறித்து எந்த நடவடிக்கையும் இந்த வழக்கிற்கு முன்பு எடுக்கவில்லையா என கேட்டால் எடுத்தேன். அதற்குண்டான ஆவணம் உள்ளதா என கேட்டால் உள்ளது. வழக்கில் தாக்கல் செய்த காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தை தவிர வேறு ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை. நான் கூறியவாறு எனது தகப்பனார் 1986 ல் இறந்துவிட்டதாக சொல்வது தவறு என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்று, இறப்பு சான்று திருமூர்த்தி சம்மந்தப்பட்டதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் சொத்துக்களாக இருக்கும் பட்சம் நான் வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றும் நான் தாவாவில் கூறியுள்ள பாரிகாரங்கள் காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவாசொத்தில் குடியிருந்து சுவாதீனத்தில் இருந்து வருவதால் நான் கோரியுள்ள சுவாதீன பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி